**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், விரைவு வழி நீதிமன்றம், ஆரணி**

**முன்னிலை.- திருமதி. கே.விஜயா, பி.எஸ்.சி., பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட நீதிபதி, விரைவு வழி நீதிமன்றம், ஆரணி**

2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ஆம் நாள் புதன்கிழமை

**ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.20/2021**

**தி.மலை மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.80/2021**

பி. சண்முகம் ... வாதி

எதிர்

பி. சம்பத் ... பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக 18.07.2022 அன்று விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மண்ணரசு அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் நீதிமன்றம் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவைகளைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் சீரிய பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா அசையா 'A' அட்டவணை சொத்துக்களான நிலங்களில் வாதிக்குரிய பாதி பாகத்தையும், தாவா அசையும் 'B' அட்டவணை சொத்துக்களான 1000 ஆடுகளில் பாதியான 500 ஆடுகளையும் பிரதிவாதி வாதிக்கு பிரித்தளிக்க உத்தரவிடக்கோரியும், பிரதிவாதி தாவா சொத்துக்களில் வாதிக்குரிய சரிபாதி பாகத்தை பிரித்துத்தர மறுக்கும்பட்சத்தில் மாண்பமை நீதிமன்றத்தார் அவர்களே ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமித்து தாவா சொத்துக்களின் தரம், தன்மை, தகுதிநிலை ஆகியவற்றை சரிபார்த்து மதிப்பிட்டு அவைகளில் வாதிக்குரிய பாதி பாகத்தை பிரித்தும், தாவா 'B' அட்டவணை சொத்தில் வாதிக்குரிய பாதிபாக மதிப்பினை தாவா 'A' அட்டவணை சொத்தில் கூடுதலாக ஈடு செய்து வாதிக்கு தக்க சுவாதீனம் அளிக்க

உத்தரவிடக்கோரியும், வாதிக்கு ஏற்பட்ட தாவா செலவினங்களை பிரதிவாதியே கட்டிக் கொடுக்க உத்தரவிடக் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்-

தாவா சொத்துக்கள் உள்ள பெரணமல்லூர் மதுரா வடுவன்குடிசை என்ற ஊருக்கு சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு குடிவந்து பின் அங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து வந்த ஒரு பச்சைபிள்ளை ரங்கநாயகி அம்மாள் தம்பதியினருக்கு முறையே மணி, நவநீதம் அம்மாள் மற்றும் பிரதிவாதி, வாதி ஆகியோர்கள் அவர்களுக்கு வாரிசுகளாக பிறந்தனர். மேற்படி பச்சைபிள்ளை - ரங்கநாயகி தம்பதியினர் தாவா சொத்து உள்ள ஊரில் மிக கடுமையாக உழைத்து இந்த தாவா அசையா சொத்துக்களையும், சுமார் 2000 ஆடுகளையும் சம்பாதித்தனர். மேற்படி நவநீதம் அம்மாளை சேத்பட்டில் பழனி என்பவருக்க மிகுந்த சீர் செய்து அவர்களது குடும்ப நகைகளை கொடுத்து திருமணம் செய்து வைத்தனர். மேற்படி பச்சைபிள்ளை - ரங்கநாயகி தம்பதியினரின் வயதான காலத்தில், அவர்களது மூத்த மகனும் வாதி பிரதிவாதியின் சகோதரனுமான மணி தனது பெற்றோருக்கு தெரியாமல் சிறுக, சிறுக வஞ்சமாக அதிக அளவு பணம் எடுத்து, அவருக்கு என பல அசையா சொத்துக்களையும், அசையும் சொத்துக்களையும் சேர்த்துக்கொண்டார். இதை காலதாமதமாக அறிந்துக் கொண்ட அவரின் பெற்றோர் மணியை கண்டித்தனர். அதனால் மேற்படி மணி அவரது பெற்றோர் என்றும் பாராமல் அவர்களை தாக்கி அவர்களுக்கு எதிராக குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார். அதனால் பச்சைபிள்ளை - ரங்கநாயகி தம்பதியினர் தங்களது சுயார்ஜித சொத்துக்கள் முழுவதையும் மேற்படி மணியே வஞ்சமாக அபகரித்துவிடுவார் என்று எண்ணி தங்களது சுயார்ஜித சொத்துக்களான இந்த தாவா சொத்துக்களை வாதி பிரதிவாதி ஆகிய இருவர் மட்டுமே கூட்டாக அடையவேண்டும் என்று சட்டப்படி அவர்களுக்கு கொடுத்தனர். தாவா அசையா சொத்துக்கள் குறித்து 01.03.2011 அன்று பதிவு ஆவணம் எழுதி வாதி பிரதிவாதிக்கு கொடுத்தனர். மேற்படி 01.03.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் நகலை வாதி இந்த தாவாவுடன்

தாக்கல் செய்கின்றாா். தாவா சொத்துக்களை வாதி பிரதிவாதி ஆகிய இருவர் மட்டுமே கூட்டாக சேர்ந்து அனுபவித்து வந்தனர். வாதிக்கு விவசாயம் நன்கு தெரியும் என்பதால் வாதி தாவா சொத்துக்களில் விவசாயம் செய்து வந்தார். பிரதிவாதிக்கு விவசாயம் தெரியாததால் அவர் தாவா அசையும் சொத்துக்களான செம்மறி ஆடுகளை மேய்த்தும், பராமரித்தும் வந்தார். வாதிக்கு விவசாயம் மூலம் வந்த வருவாயில் பாதியை பிரதிவாதியிடமும், பிரதிவாதிக்கு ஆடுகள் மூலம் வந்த வருவாயில் பாதியை வாதியிடமும் கொடுத்து நல்லமுறையில் கூட்டாக அனுபவித்து வந்தனர். மேற்படி சொத்துக்களை அபகரிக்க மணி என்பவர் வீண் தகராறு செய்தார். மேற்படி மணி தாவா அசையா சொத்துக்களில் 1/4 பாகம் பிரித்து வழங்க உத்தரவிடக்கோரி இவ்வழக்கு வாதி, பிரதிவாதி, பச்சைபிள்ளை -ரங்கநாயகி அம்மாள் மற்றும் இருவருக்க எதிராக 19.04.2012 அன்று செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.39/20125 என்ற வழக்கை தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு மணிக்கு எதிராகவும், வாதி, பிரதிவாதி ஆகியோர் கோரியவாறும், தாவா சொத்துக்கள் மேற்படி பச்சைபிள்ளை - ரங்கநாயகி ஆகியோரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அவைகளை அவர்கள் இவ்வழக்க வாதி பிரதிவாதி ஆகிய இருவருக்கும் கொடுத்தது செல்லும் என்றும், கூறி 30.09.2015 தேதியன்று மேற்படி தாவா தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பானது. மேற்படி மணியும் மேற்படி தீர்ப்பு, தீர்ப்பாணைகளை ஏற்றுக்ொகண்டார். அதனால் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. மேற்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் இந்த தாவாவுடன் தாக்கல் செய்யப்படுகின்றது. எனவே தாவா சொத்துக்கள் இவ்வழக்கு வாதி, பிரதிவாதி ஆகிய இருவருக்கு மட்டுமே உரிமை என ஊர்ஜிதமாகின்றது. மேற்படி வழக்கு செலவு முழுவதையும் வாதி மட்டுமே செய்தார். இவ்வழக்கு பிரதிவாதி எந்த பங்களிப்பும் செய்யவில்லை. இந்நிலையில் மேற்படி மணி தாவா சொத்துக்களில் உரிமை கோரி அவரது பெற்றோரான மேற்படி பச்சைபிள்ளை - ரங்கநாயகி ஆகியோரை தாக்கியும், அவர்களுக்கு எதிராக கொலை முயற்சியிலும் ஈடுபட்டார். அதனால் ரங்கநாயகி அம்மாள் மணிக்கு எதிராக இரண்டு குற்றவியல் நடவடிக்கைகள் எடுத்து அவை தற்போதுவரை நிலுவையில் உள்ளன. பின்னிட்டு பச்சைபிள்ளை -ரங்கநாயகி அம்மாள்

உடல்நிலை சரியில்லாமல் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிட்டனர். இந்நிலையில் சமீப காலமாக பிரதிவாதி மணியின் தவறான துர்போதனைகளை கேட்டு அவரது பொறுப்பில் உள்ள ஆடுகள் மூலம் வரும் வருமானத்தில் வாதிக்குரிய பாதி பாகத்தை கொடுக்காமல் மறைத்து பிரதிவாதியே அபகரித்து வந்தார். மேற்படி மோசடியை காலதாமதமாக அறிந்துக் கொண்ட வாதி, முதலில் நேரிடையாகவும், பின் பஞ்சாயத்தார் மூலமும் பிரதிவாதியை அணுகி, ஆடுகள் மூலம் வரும் வருவாயில் பாதியை கொடுக்குமாறு கேட்டார். அதற்கு பிரதிவாதி ஆடுகள் மூலம் வரும் வருமானமே வரவில்லை என்று அபாண்டமாகவும், அடாவடியாகவும் பொய்யை கூறினார். இதனால் எண்ணிக்கையை சரிபார்த்தார். அப்போது மேற்படி பிரதிவாதி பெரும்பாலான ஆடுகளை வாதிக்கு தெரியாமல் விற்று வருவது வாதிக்கு தெரியவந்தது. அதனால் அதிர்ச்சியடைந்த வாதி மீண்டும் பிரதிவாதியை அணுகி நியாயம் கேட்டார். அதற்கு பிரதிவாதி அவரது குடும்பத்தினருடன் வாதியை அசிங்கமாக பேசி அவரை தாக்க வந்தனர். அதனால் வாதி அவர்களிடமிருந்து தப்பித்து வந்துவிட்டார். எனினும் மேற்படி பிரதிவாதி, வாதியை தாக்கும் நோக்கத்திலேயே இருந்து வருகின்றார். இதனால் வாதி மிகுந்த அதிர்ச்சியடைந்து முதலில் பிரதிவாதி பொறுப்பில் உள்ள ஆடுகளில் பாதியை பிரித்து தர 19.08.2019 அன்று அவருக்கு ஒரு சட்ட அறிவிப்பினை அளித்தார். அந்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டு எந்த பதிலும் அளிக்கவில்லை. மாறாக மீண்டும் அவரது பொறுப்பில் உள்ள ஆடுகளை தொடர்ந்து விற்று வந்தார். எனவே வாதி மீண்டும் பிரதிவாதிக்கும் அவர் ஆடுகளை மேய்ச்சலுக்கு என கொடுத்து வைத்திருக்கும் பக்கத்து ஊர்களில் உள்ள திரு. மண்ணு, திரு. ஆர். ஆறுமுகம், திரு. எல்.பாலு, திரு. பி. ரவி, திரு. எம். ஆனந்தன், திரு. கே. தசரதன், திரு. டி. ராஜசேகர் ஆகியோருக்கும் 21.08.2020 அன்று ஒரு சட்ட அறிவிப்பினை அளித்து தமக்கும் தெரியாமல் விற்க கூடாது என்று சட்ட அறிவிப்பினை அளித்தார். மேற்படி சட்ட அறிவிப்பிற்கும், பிரதிவாதி எந்த பதிலையும் இதுவரை அளிக்கவில்லை. அதன்படி பிரதிவாதி சட்டத்தையும், நியாயத்தையும் மதிக்காமல் அடாவடியாக நடந்து கொள்பவர் என்று நன்றாக தெரியவரும். இந்நிலையில் வாதியின்

பராமரிப்பில் இருந்த தாவா அசையா சொத்துக்களில் விவசாய நிலங்கள் சில வருடங்களாக போதிய வருமானம் இல்லை. அதனால் வாதி மேற்படி விவசாய நிலங்களை பராமரிக்கவே மிகுந்த சிரமத்தில் இருந்தார். எனவே தாவா அசையா சொத்துக்களில் பாதி அளவு சொத்துக்களை பிரித்துக் கொள்ள பஞ்சாயத்தார் மூலம் 10.09.2020 அன்று வாதி பிரதிவாதியை அணுகிய போது அவரது பொறுப்பில் உள்ள ஆடுகளில் வாதிக்கு எந்த பங்கும் கொடுக்க முடியாது என்றும், அதேபோல் தாவா அசையா சொத்துக்களான விவசாய நிலங்களையும் அபகரித்து அதில் எந்த பாகமும் பிரித்துதர முடியாது என்று மீண்டும் அடாவடியாக கூறிவிட்டார். இந்நிலையில் இனியும் இந்த தாவா சொத்துக்களில் கூட்டாக இருப்பதில் எந்த பயனும் இல்லை. மேற்படி பச்சை பிள்ளை - ரங்கநாயகி தம்பதியினர் உயிரோடு இருந்த சமயத்தில் பிரதிவாதி பொறுப்பில் 2000 செம்மறி ஆடுகள் வரை இருந்தது. இதை அவர்களது சகோதரரான மேற்படி மணியே காவல் துறையின் விசாரணையிலும், நீதிமன்றத்திலும் உறுதி செய்துள்ளார். எனினும் வாதி, பிரதிவாதியின் பொறுப்பில் தற்போது 1000 ஆடுகள் உள்ளது என கணக்கிட்டு அதில் பாதி எண்ணிக்கையான 500 ஆடுகளை தமக்கு பாகமாக அளிக்க கோறுகின்றார். அவ்வாறு மேற்படி பிரதிவாதி 500 ஆடுகளை வாதிக்கு அளிக்க மறுக்கும்பட்சத்தில் அவைகளின் மதிப்பிற்கு ஈடாக தாவா அசையா சொத்துக்களில் ஈடுசெய்ய வாதி மாண்பமை நீதிமன்றத்தினை பிரார்த்திக்கின்றார். எனவே தாவா அசையும் மற்றும் அசையா சொத்துக்களில் வாதிக்குண்டான பாதி பாகத்தை பிரதிவாதி பிரித்தளிக்க தக்க உத்தரவிட வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்கின்றார்.

3. பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக் கொண்டு, நீதிமன்றம் அழைத்தும் ஆஜரின்மையால் பிரதிவாதியை 03.06.2022ம் தேதியன்று தோன்றாத்தரப்பினராக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பில், வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ விசாரணை செய்தும், வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.தீர்வு.**

(5.1) இவ்வழக்கில், வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டபோது, தன் வழக்குரை விவரங்களை தெரிவித்து சாட்சியம் அளித்துள்ளார். 30.09.2015-ம் தேதியிட்ட செய்யாறு சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.39/2012 வழக்கின் தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 30.09.2015-ம் தேதியிட்ட செய்யாறு சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.39/2012 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 01.03.2011 தேதியிட்ட வாதி பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 19.08.2019 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும், வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், 21.08.2020 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கும் இன்னும் சிலருக்கும் அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகவும், வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதியும் இன்னும் சிலரும் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(5.2) பிரதிவாதி தரப்பில் தாவாவில் வழக்கறிஞர் மூலம் முன்னிலை ஆகாத நிலையிலும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையில், பிரதிவாதி அழைத்தும் வருகையின்மையால் அவரைப் பொறுத்து தோன்றா தரப்பினராகத் தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு சங்கதியான வழக்கு சொத்து குறித்து ஒரு மணி என்பவர் வாதி, பிரதிவாதி பெற்றோர்கள் மற்றும் வாதி பிரதிவாதி மீது ஒரு மணி என்பவர் வழக்கு தொடர்ந்து அதில், வாதி, பிரதிவாதியின் பெற்றோர்கள் மற்றும் வாதி பிரதிவாதிக்கு சாதகமாகத் தீர்ப்பாகியுள்ளது. மேலும், வாதி, பிரதிவாதியின் பெற்றோர்கள் வழக்கிற்கு முன்பே வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு 01.03.2011 அன்று தாவா சொத்துகள் குறித்து வாதி பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளது தெரியவருகிறது. மேற்படி பத்திரம் முன்னிலைக்கு தாவா சொத்துக்கள் வாதி, பிரதிவாதி இன்றைய தேதிவரை கூட்டாக அனுபவித்து வருவதும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி வா.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு அனுப்பியும் அதை வா.சா.ஆ.5 முன்னிலைக்கு பிரதிவாதி பெற்றுக்கொண்டதும் தெரிய

வருகிறது. இவ்வாறான நிலையில், தாவா சொத்தை குறித்து வாதி தன்னுடைய வழக்கை நிரூபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசையும் சொத்துக்களான 1000 ஆடுகள் குறித்து பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை மறுத்து கட்சி செய்யாததால் மேற்படி அசையா சொத்துக்கள் குறித்து பிரதிவாதிக்கு எதிராக அனுமானிக்கவேண்டியுள்ளது. அதனால், வாதியின் கோரிக்கை ஏற்கக்கூடியதாகவே உள்ளது. அதனால், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் தாவா ‘A’ அட்டவணை சொத்துக்களில் வாதிக்குரிய பாதி பாகத்தையும், தாவா அசையும் ‘B’ அட்டவணை சொத்துக்களான 1000 ஆடுகளில் பாதியான 500 ஆடுகளை பிரதிவாதிக்கு வாதிக்கு பிரித்தளிக்கவேண்டும். அவ்வாறு 500 ஆடுகள் பிரித்தளிக்க தவறும்பட்சத்தில் 500 ஆடுகளுக்கான அன்றைய தேதிய தொகையை வாதிக்கு பிரதிவாதி கொடுப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும். 500 ஆடுகளுக்காக அதற்கான நிலங்களை பிரதிவாதியிடமிருந்து வாதி பெறுவது ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக,** வழக்கு தாவா அசையா 'A' அட்டவணை சொத்துக்களான நிலங்களில் வாதிக்குரிய பாதி பாகத்தையும், தாவா அசையும் 'B' அட்டவணை சொத்துக்களான 1000 ஆடுகளில் பாதியான 500 ஆடுகளையும் பிரதிவாதி வாதிக்கு பிரித்தளிக்க வேண்டும் என்றும் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்களின் உறவு முறையைக் கருத்தில்கொண்டு வழக்கு செலவுத்தொகை ஏதுமில்லை என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2022ம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 10-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/-கே.விஜயா,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விரைவு வழி நீதிமன்றம், ஆரணி.

கூடுதல் மாவட்ட நீதிபதி, ஆரணி.

<u>**வாதி தரப்பு சாட்சிகள்**</u>

வா.சா.1 - திரு. பி. சண்முகம் ( வாதி)

வா.சா.2 - திருமதி. நவநீதம்மாள்.

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள்**</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.09.2015 | தேதியிட்ட செய்யாறு சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.39/2012 வழக்கின் தீர்ப்பு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 30.09.2015 | தேதியிட்ட செய்யாறு சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.39/2012 வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 01.03.2011 | தேதியிட்ட வாதி பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்டது | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 19.08.2019 | தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | -- | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.6 | 21.08.2020 | தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கும் இன்னும் சிலருக்கும் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | -- | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதியும் இன்னும் சிலரும் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை | அசல் |

<u>**பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணம்**</u> இல்லை.

ஒம்/-கே.விஜயா,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விரைவு வழி நீதிமன்றம், ஆரணி.

கூடுதல் மாவட்ட நீதிபதி, ஆரணி.